# முஹம்மது இஸ்மாயில்

# ஐ.டி.ஐ

**ISO 29990 : 2010**

**(Sponsored by Muslim Orphanage Committee)**

சதக்கத்துல்லா அப்பா காலேஜ் அருகில்,
அரசு சட்டக்கல்லூரி எதிரில் ரஹ்மத்நகர், திருநெல்வேலி - 627 011.

**Website : www.muhammadismailititvl.org**

**Admission Contact : 0462 2900393, 96558 88438, 9655888439, 96558 88450**

muhammad ismail iti | iti muhammad ismail | @ismailititvl




## விளக்க ஏடு

**அலுவலக முகவரி**

M.O.C வளாகம்
காதிர் நகர், ஹைகிரவுண்டு, திருநெல்வேலி - 627 011.
தொலைபேசி : 2573157, 2586754

முஸ்லீம் அனாதை நிலையம் ஏழை அனாதை மற்றும் திக்கற்ற சிறுவர் சிறுமிகளுக்கு உணவு, உடை, உறைவிடம் மற்றும் கல்வி அளிப்பதைப் பிரதான நோக்கமாக கொண்டு 1957ம் ஆண்டு திருநெல்வேலி, ஹைகிரவுண்டில் துவங்கப் பெற்றது. கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்களின் நினைவாக முஹம்மது இஸ்மாயில் தொழிற்பயிற்சி நிறுவனம் 1979 ம் ஆண்டு முஸ்லீம் அனாதை நிலைய மாணவர்களுக்கும், சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கும் தொழிற்கல்வி அளிப்பதற்கு இப்பயிற்சி நிறுவனம் துவங்கப்பெற்றது. தற்காலத்தில் நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும், குறிப்பாக எண்ணெய் வளம் மிகுந்த வளைகுடா நாடுகளிலும் தொழிற்கல்வி கற்றவர்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் பெருகி வருவதைக் கருத்தில் கொண்டு துவங்கப்பெற்றது இந்நிறுவனம். வேலை வாய்ப்பு மிகுதியாக உள்ள தொழிற்பிரிவுகளைத் தொடங்கி கல்வியிலும் பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்கள் உடனடியாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்புகள் பெற உதவி செய்து வருகிறோம்.

## அமைவிடம்

திருநெல்வேலி - தூத்துக்குடி நெடுஞ்சாலையில் உள்ள ரஹ்மத்நகரில் முஸ்லீம் அனாதை நிலையத்திற்குப் பாத்தியப்பட்ட முத்து வாப்பா மன்ஸில் மற்றும் அதையொட்டிய கட்டிடங்களில் 5 தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

## தொழிற்பிரிவுகள்

கீழ்க்கண்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சி வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுப்படுத்துதல் நுட்பவியாளர் (R & AC Tech.) | - 2 ஆண்டுகள் |
| மின் பணியாளர் (Electrician) | - 2 ஆண்டுகள் |
| கட்டிட பட வரைவாளர் (Draughtsman Civil) | - 2 ஆண்டுகள் |
| பொருத்துனர் (Fitter) | - 2 ஆண்டுகள் |
| குழாய் பொருத்துனர் (Plumber) | - 1 ஆண்டு |

## அங்கீகாரம், தேர்வு

இங்கு நடைபெறும் எல்லாத் தொழிற்பிரிவுகளும் NCVT Delhi - யுடன் இணைக்கப்பட்டுள்ளன. பயிற்சி கால முடிவில் அரசு நடத்தும் அகில இந்திய தொழிற்தேர்வுகள் எழுதி வெற்றி பெற்றவர்களுக்கு NTC அரசு சான்றிதழ் வழங்கப்படுகிறது. எங்கள் பயிற்சி நிறுவனம் ISO 29990:2010 தரச் சான்றிதழ் பெற்றுள்ளது. மேலும் மத்திய அரசின் Grading என்ற தர நிர்ணய தகுதியில் 4.6 புள்ளிகள் பெற்ற நட்சத்திர நிறுவனமாகும்.

## கல்வி மற்றும் வயது

இரண்டு ஆண்டு பயிற்சிப் பிரிவுகளுக்கு விண்ணப்பதாரர்கள் S.S.L.C தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் / +2 தேர்வில் தோல்வி அடைதல் வேண்டும்.

ஓராண்டு பயிற்சிப் பிரிவிற்கு கல்வித் தகுதி 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் / பத்தாம்வகுப்பு தேர்வில் தோல்வி அடைதல். சேர்க்கை தேதியில் எல்லா தொழிற்பிரிவுகளுக்கும் விண்ணப்பதாரர்களின் வயது வரம்பு 15 முதல் 40க்குள் இருக்க வேண்டும்.

## சேர்க்கை

மாணவர்கள் சேர்க்கை மே 1 முதல் துவங்கும். பயிற்சி ஆகஸ்டு மாதம் துவங்கும். கோடை மற்றும் இடை விடுமுறை இல்லாத பயிற்சியாகும். (Non Vacation Course) விண்ணப்பபடிவங்களை தொழிற்பயிற்சி நிலைய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பபடிவக் கட்டணம் ரூ. 200/- மட்டுமே. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு ஆஜராக வேண்டும். தொழிற்பிரிவிற்கு ஏற்ற உடல்வாகு அவசியம். சேருவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பப்படுவார்கள். மருத்துவப் பரிசோதனையில் ஏதாவது தொற்று நோய் இருப்பதாகத் தெரிந்தால் சேர்க்கை ரத்து செய்யப்படும்.

## கட்டண விபரம்

| | |
|---|---|
| மருத்துவ பரிசோதனை கட்டணம் | ரூ. 200/- |
| ஆண்டு காப்பீட்டுக் கட்டணம் | ரூ. 300/- ஆண்டுதோறும் |
| சேர்க்கை கட்டணம் | ரூ. 500/- ஆண்டுதோறும் |
| பணிமனை பராமரிப்புக் கட்டணம் | ரூ. 1000/- ஆண்டுதோறும் |
| சிறப்புக் கட்டணம் | ரூ. 800/- ஆண்டுதோறும் |
| விளையாட்டு கட்டணம் | ரூ. 1000/- ஆண்டுதோறும் |
| மாதாந்திரக் கட்டணம் | ரூ. 1000/- ஆண்டுதோறும் |
| அடையாள & அனெக்ஸர் அட்டை | ரூ. 750/- ஆண்டுதோறும் |
| கம்ப்யூட்டர் பயிற்சி கட்டணம் | ரூ. 1000/- ஆண்டுதோறும் |
| யூனிபார்ம் | ரூ. 3000/- ஆண்டுதோறும் |

## மாதப் படிப்புக் கட்டணம்

ஒவ்வொரு மாதம் 10ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட விபரப்படி செலுத்த வேண்டும்

| | |
|---|---|
| குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுப்படுத்துதல் நுட்பவியாளர் (R & AC Tech.) | ரூ. 1000 |
| மின் பணியாளர் (Electrician) | ரூ. 1000 |
| கட்டிட பட வரைவாளர் (Draughtsman Civil) | ரூ. 1000 |
| பொருத்துனர் (Fitter) | ரூ. 1000 |
| குழாய் பொருத்துனர் (Plumber) | ரூ. 1000 |

**சீருடை :** பயிற்சியாளர்கள் வகுப்பறைக்கும், பணிமனைக்கும் சீருடை கட்டாயம் அணிந்து வர வேண்டும். கால்களுக்கு ஷூ (Shoes & Socks) அணிய வேண்டும். ID Card தினசரி அணிந்து வர வேண்டும். சேர்க்கையின் போது சீருடைகளுக்கான உரிய கட்டணத்தைச் செலுத்தி நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

**வருகைப் பதிவு :** மொத்த வேலை நாட்களில் 80 சதவீதத்திற்குக் குறையாமல் வகுப்பிற்கு வருகை தரும் பயிற்சியாளர்கள் மட்டும்தான் அகில இந்திய தொழிற்தேர்வுகள் எழுத தகுதியுடையவராவர். 80 சதவீதத்திற்கு குறைவாக வருகை தரும் பயிற்சியாளர்கள் அகில இந்திய தொழிற் தேர்வுகள் எழுதும் தகுதியை இழந்து விடுவர். எனவே தேர்வு செய்யப்பட்டு பயிற்சியில் சேரும் மாணவர்கள் அடிக்கடி விடுப்பு எடுக்காமல் ஒழுங்காக கால தாமதமின்றி பள்ளிக்கு வந்து 80 சதவீதத்திற்குக் குறையாமல் வருகைப் பதிவு பெற வேண்டும் Bio Metric முறையில் வருகையானது பதிவு செய்யப்படுகிறது.

**விடுதி வசதி :** வெளியூர் மாணவர்கள் தங்கி பயில நமது ITI யில் தொழுகைப் பள்ளியுடன் இணைந்த விடுதி வசதி உள்ளது. விடுதியில் தங்கும் முஸ்லீம் மாணவர்கள் ஐங்கால தொழுகையையும் கட்டாயம் தொழுது வர வேண்டும். ஆண்டுக்கு ஒருமுறை அறைக்கட்டணம் ரூ. 2000, பராமரிப்புக் கட்டணம் ரூ. 2000 செலுத்த வேண்டும்.

உணவு முன் கட்டணம் ரூ. 2500. இத்தொகை ஆண்டு இறுதி மாத உணவு கட்டணத்தில் சரி செய்யப்படும். பங்கீட்டு முறையில் மாத உணவுக் கட்டணம் வசூலிக்கப்படும். விடுதியின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படாத மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## பொது விதிகள்

1. பயிற்சி நிறுவனத்திலும் விடுதியிலும் சேர்த்துக் கொள்ளப்படும் பயிற்சியாளர்கள் நிர்வாகம், முதல்வர், பயிற்றுநர்கள் மற்றும் விடுதிகாப்பாளர் அறிவிக்கும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடந்து வர வேண்டும்.
2. தொழிற்பயிற்சி நிலையத்தின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு மாணவ / மாணவியர் நடக்க வேண்டும்.


## சிறப்பு அம்சங்கள்

- எங்கள் ITI யின் மாணவர்கள் மாவட்ட மற்றும் மண்டல அளவிலான விளையாட்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளனர்.
- மாணவர்களின் திறமையை மேற்படுத்த மாணவர் நல பேரவை (Student Welfare Organisation Committee) உருவாக்கப்பட்டுள்ளது.
- மாணவர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்த Disipline Committee உருவாக்கப்பட்டுள்ளது.

**எங்கள் ITI யில் 20 வருட அனுபவ மிக்க ஆசிரியர்களால் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.**

**100% உறுதியான வேலைவாய்ப்பு**

**100% வேலைவாய்ப்பை பெற்றுத் தமது ITI யில் Placement அமைப்பின் மூலம் உள்ளூர், அரசு மற்றும் தனியார், வளமிக்க வளைகுடா நாடுகளிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி கொடுத்து வருகிறோம்.**



ஜும்ஆ பள்ளிவாசல்




District Level Sports Winner




Placement Awareness Programme




Discipline Team




Fitter Workshop




Electrician Workshop



Draughtsman Civil Computer Lab



R & AC Tech.



Plumber

ஹாஜி M.K.M. செய்யது அகமது கபீர் சாஹிப்

தலைவர்

MOC

அல்ஹாஜ் M. நூர்தீன்

செயலாளர் / தாளாளர்,

முஹம்மது இஸ்மாயில் ஐ.டி.ஐ.